(Chapter XXIII Code of Criminal Procedure)

----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

Calender .. .. Case No. CC. 48 of 2022

Miscellaneous .. ..

Preliminary Register .. ..

Sessions .. ..

Deposition of witness for — Prosecution/Complainant side **P.W.1** / Defence / Court

Name : சக்திவேல்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day of September 2022.

05.09.2022

**சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).**

**முதல் விசாரணை**

**1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் 1 முதல் 3 எதிரிகளை தெரியும். அவர்கள் எனது**

பக்கத்து ஊர்க்காரர்கள். கடந்த 11.08.2021ம் தேதி இரவு 08.00 மணிக்கு நான் எனது வீட்டின் உள்ளே பருத்தியிலிருந்து பஞ்சை பிரித்துக் கொண்டிருந்தேன்.

**2.** அப்போது ஆஜர் 1ம் எதிரி குருநாதன் இருசக்கரவாகனத்தில் வந்து கையில் கொண்டு வந்திருந்த கம்பை வைத்து எனது தலையின் இடது பக்கத்திலும், தலையில் கம்பை வைத்து ஆஜர் 1ம் எதிரி அடிக்கும்போது நான் தடுக்க முற்பட்டபோது எனது இடது கையிலும் காயம் ஏற்பட்டது. பின்பு இடதுபக்க விலாவிலும் கம்பை வைத்து அடித்தார். நான் மயங்கி விட்டேன். எனது மனைவி எனக்கு தண்ணீர் கொடுத்தார்.

**3.** நான் மயக்கம் தெளிந்து எழுந்தபோது வீட்டிற்கு வெளியே இருந்த ஆஜர் 2ம் எதிரி கருப்பாயி மற்றும் ஆஜர் 3ம் எதிரி மேகலா ஆகியோர் கல்லால் எறிந்தார்கள். எறிந்த கற்கள் எனது இடது பக்க விலாவில் விழுந்தது. எதற்காக ஆஜர் மூன்று எதிரிகளும் என்னை வந்து திடீர் என்று தாக்கினார்கள் என்று எனக்குத் தெரியாது.

**4.** சண்முகநாதனும், கண்ணனும் என்னை அங்கிருந்து என்னை காரில் அழைத்துச்சென்றார்கள். காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன் ஆனால் அவர்கள் காயம் அதிகமாக இருந்ததால் போலிசார் மருத்துவமனைக்கு செல்ல அறிவுறுத்தினார்கள் அதனால் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்ந்தேன்.

**5.** அங்குவந்த போலிசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். புகார் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்துகொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன் அடிப்படையில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

| | | |
|---|---|---|
| Calender | .. .. | Case No. CC. 48 of 2022 |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |
| | | Prosecution/Complainant side **P.W.2** |
| Deposition of witness for | | Defence |
| | | Court |

Name : கோவிந்தராஜ்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day of September 2022.

05.09.2022

**சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).**

**முதல் விசாரணை**

**1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் 1 முதல் 3 எதிரிகளை தெரியும். அவர்கள் எனது**

பக்கத்து ஊர்க்காரர்கள். அசா.1 சக்திவேல் எனது உடன்பிறந்த அண்ணன். அசா.1ன் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் 250 மீட்டர் தூரம் இருக்கும். கடந்த 11.08.2021ம் தேதி இரவு 08.00 மணிக்கு சத்தம் கேட்டது.

**2.** நான் என்னவென்று பக்கத்துவீட்டில் கேட்டபோது எனது அண்ணன் அசா.1யை 1ம் எதிரி குருநாதன் அடித்து காயம் ஏற்படுத்தியதாக கூறினார்கள். நான் உடனே சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது அங்கிருந்த 2ம் எதிரி கருப்பாயி களவெட்டியால் நெற்றியில் கொத்திவிட்டார்.

**3.** உடனே நானும், எனது அண்ணனும் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்ந்தோம். போலிசார் அங்கு வந்து என்னை விசாரித்தார்கள் நான் நடந்ததை நடந்தபடி கூறினேன் போலிசார் விசாரித்து எழுதிக்கொண்டார்கள்.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன் அடிப்படையில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

| | | |
|---|---|---|
| Calender | .. .. | Case No. CC. 48 of 2022 |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |
| | | Prosecution/Complainant side **P.W.3** |
| Deposition of witness for | | Defence |
| | | Court |

| | | |
|---|---|---|
| Name | : | மீனாட்சி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day of September 2022.

05.09.2022

**சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).**

**முதல் விசாரணை**

**1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் 1 முதல் 3 எதிரிகளை தெரியும். அவர்கள் எனது**

பக்கத்து ஊர்க்காரர்கள். அசா.1 சக்திவேல் எனது கணவர். கடந்த 11.08.2021ம் தேதி இரவு 08.00 மணிக்கு அசா.1ம் நானும் எங்களது வீட்டில் பஞ்சை எடுத்துக்கொண்டிருந்தோம்.

**2.** அப்போது ஆஜர் 1ம் எதிரி குருநாதன் கதவை திறந்துக்கொண்டு வீட்டிற்குள் வந்து அசா.1யை பார்த்து ஏன்டா என்னை கூட்டத்திற்கு கூப்பிடவில்லை உன்னை அடிக்காமல் விடமாட்டேன்டா என்று கூறினார். ஆஜர் 1ம் எதிரி குருநாதன் கம்பை எடுத்துக்கொண்டு சடார் சடார் என்று எனது கணவர் அசா.1யை அடித்துவிட்டார்.

**3.** அதில் அசா.1க்கு தலையில் வலதுபக்கத்தில் காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. அசா.1 மயங்கிவிட்டார் நான் தண்ணீரை எடுத்துக்கொடுத்தேன். அப்போது ஆஜர் 3ம் எதிரி மேகலா சல்லிக்கற்களை எடுத்து அசா.1ன் மேல் எறிந்தார். உடனே சண்முகநாதன் மற்றும் கண்ணன்ஆகியோர் வந்து எனது கணவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள்.

**4.** எனது கொழுந்தன் அசா.2 கோவிந்தராஜ் அங்கு வந்தார். அசா.2 யை 2 ம் எதிரி களவெட்டியால் தலையில் கொத்திவிட்டார். நாங்கள் அனைவரும் கீழத்தூவல் காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கு சிகிக்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். பரமக்குடி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன் அடிப்படையில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.